## 717 டாஸ்மாக் கடைகளும் மூடப்பட்டதாக அறிவிப்பு!

# கீழ்பென்னாத்தூரில் மூடப்படாமல் இயங்கி வரும் டாஸ்மாக் கடை!

## பொதுமக்கள் கடும் அதிருப்தி!

கீழ்பென்னாத்தூர் . ஜூன் 15 -

தமிழ்நாட்டில் முதலமைச்சராக விஜய் பதவியேற்றவுடன் 717 மதுபான கடைகளை மூட உத்தரவிட்டார். அதன்படி 717 டாஸ்மாக் கடைகளும் மூடப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர், போளூர் தொகுதிகளில் உள்ள 2 டாஸ்மாக் கடைகள் மூடப்படுவதாக அறிவிக்கப்பட்டது. ஆனால் கீழ்பென்னாத்தூர் கருங்காலிகுப்பம் சாலையில் உள்ள அரசு டாஸ்மாக் கடை மூடப்படவில்லை.

இந்த கடைக்கு அருகே அரசு ஆண்கள் பள்ளி, மத வழிபாட்டு தலம், கோயில் உள்ளது. மாணவ மாணவிகள் அதிகம் பேர் இந்த சாலையைத்தான் தினமும் பயன்படுத்தி வருகின்றனர்.

மாலை நேரத்தில் டாஸ்மாக் கடை அருகே பைக்குகளை நிறுத்தி விடுவதால் அவ்வழியாக செல்லும் வாகன ஓட்டிகள், மாணவ, மாணவிகள், பெண்கள் பெரும் அச்சமடைகின்றனர்.

பள்ளிக்கு அருகிலேயே மதுக்கடை இயங்குவதால், மாணவர்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகி உள்ளதாகப் பெற்றோர்கள் கண்ணீருடன் குற்றம் சாட்டிவருகின்றனர்.

மதுபிரியர்கள் தினமும் நடுரோட்டிலும், சாலை ஓரத்திலும் அருவருக்கத்தக்க நிலையில் படுத்திருக்கும் 'குடிமகன்' களால் இப்பகுதியில் எப்போழுது என்ன நடக்குமோ என தினம் தினம் மிகவும் அச்சத்திலேயே அப்பகுதி பொதுமக்கள் வாழ்ந்து வரும் நிலை ஏற்பட்டுள்ளது.

---

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில்

# தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டம்!

## சட்டமன்ற கழக கொறடா எ.வ.வேலு அறிவிப்பு!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில், கழக சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டம் 17062026 புதன்கிழமை மாலை 6.00 மணி அளவில் சென்னை, அண்ணா அறிவாலயம், "கலைஞர் அரங்கில் நடைபெறும். அதுபோது கழக சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : ஆளுநர் உரை

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை 18.
நாள் : 14,06.2026.

**எ.வ.வேலு**
கொறடா
தி.மு.க.

---

## குற்றவாளிகளின் கூடாரமாக மாறியது; கொடூர குற்றங்கள்,

# பாலியல் வன்கொடுமைகளை தடுக்க முடியாமல் திணறும் த.வெ.க. அரசு!

## குற்றவாளிகளுக்கு அடைக்கலம் தரும் கட்சியாக உருவெடுத்துள்ளதா? - சமூக ஆர்வலர்கள் கேள்வி!

**சென்னை, ஜீன் 15 -**

**தமிழகத்தில் சட்டப்பேரவை தேர்தலில் 108 தொகுதிகளில் வெற்றி பெற்று தனிப் பெரும் கட்சியாக தவெக உருவெடுத்தது. திமுக கூட்டணியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற கட்சிகளின் ஆதரவுடன் தற்போது முதல்வராக விஜய் பதவி ஏற்றுள்ளார். தமிழகத்தில் தவெக ஆட்சி பொறுப்பேற்றது முதல் தொடர்ந்து அதிகரித்து வரும் சட்டம் ஒழுங்கு சீர்குலைவு மற்றும் அடுத்தடுத்து அரங்கேறும் குற்றச் சம்பவங்கள் மக்கள் மத்தியில் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.**

அந்த அளவுக்கு கொடூர குற்ற சம்பவங்களும், பாலியல் வன்கொடுமை சம்பவங்களும் அரங்கேறாத நாட்களே இல்லை என்ற அளவுக்கு உள்ளது. அதுமட்டுமல்ல இதுபோன்ற கொடூர சம்பவங்களில் கைதாகும் நபர்களை பற்றிய பின்புலங்களை விசாரித்தால் 90 சதவீதம் பேர் தவெகவினராகவே இருப்பது தான் அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது.

**சைலண்ட் மோதல் முதல்வர் விஜய்!**

அதனால் தான் தமிழகத்தில் கொலை, கொள்ளை போன்ற குற்றங்கள் பகிரங்கமாக நடந்து வரும் சூழலிலும், காவல்துறையைக் கையில் வைத்துள்ள முதல்வர் விஜய் எவ்விதக் கடுமையான நடவடிக்கையும் எடுக்காமல் 'சைலன்ட் மோடில்' இருப்பதாக அரசியல் கட்சி தலைவர்கள் சாடி வருகின்றனர். அதேபோன்று, தலைநகர் சென்னை முதல் தென் மாவட்டங்கள் வரை நடக்கும் தொடர் வழிப்பறிகள் மற்றும் கும்பல் வன்முறைகள் பொதுமக்களை அச்சத்தில் ஆழ்த்தியுள்ளன.

**41 த.வெ.க. எம்.எல்.ஏ.க்கள் மீது குற்ற வழக்குகள்!**

ஆதரவு தெரிவித்த அரசியல் கட்சிகளே த.வெ.க. அரசை எச்சரிக்கும் அளவுக்கு நிலமை கை மீறி சென்று கொண்டிருக்கிறது. இந்த நிலைமைக்கு பல்வேறு காரணங்களை அரசியல் விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர். குறிப்பாக, ஜனநாயக சீர்திருத்தங்களுக்கான சங்கம் (ADR) வெளியிட்ட தேர்தல் பின்னணி அறிக்கையின்படி, த,வெ,க, சார்பில் போட்டியிட்ட 92 வேட்பாளர்கள் தம்மீது குற்ற வழக்குகள் இருப்பதாகத் தேர்தல் பிரமாணப் பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும், தேர்தலில் வெற்றி பெற்று த,வெ,க, சார்பில் சட்டமன்றத்திற்குத் தேர்வாகியுள்ள புதிய 41 எம்.எல்.ஏ.க்கள் மீது குற்ற வழக்குகள் நிலுவையில் உள்ளன. இதில் 19 பேர் மீது கொலை, கடத்தல் போன்ற மிகக் கடுமையான பிரிவுகளில் வழக்குகள் உள்ளன என்பது குறிப்பி டத்தக்கது.

**த.வெ.க. வினரே காரணம்!**

கட்சியினரின் பயோடேட்டாவை பார்த்தால் தமிழகத்தில் நடைபெறும் சட்டம் ஒழுங்கிற்கு 90 சதவீதம் த.வெ.க.வினரே காரணமாக இருப்பது தெரியவந்துள்ளது.

ஏற்கனவே, த.வெ.க. தொடங்கிய போது ரசிகர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், மற்ற அரசியல் கட்சிகளில் சேர முடியாமல் விரட்டப்பட்ட கிரிமினல் வழக்கு கொண்ட பல நபர்கள், பணத்தை கொடுத்து தவெகவில் தஞ்சமடைந்துள்ளனர். முக்கிய பொறுப்புகளில் அவர்கள் தற்போது கோலோச்சி வருவதால், அவர்களின் எடுபிடிகள் எந்தவித பயமும் இல்லாமல் தங்களது குற்றங்களை அரங்கேற்றுகிற தகவலும்தற்போதுவிவாதப்பொருளாகியுள்ளது.

**த.வெ.க.வில் இணையும் முக்கிய குற்றவாளிகள்!**

அதுமட்டுமல்ல, நில அபகரிப்பு, கட்டப் பஞ்சாயத்து உள்ளிட்ட புகார்களுக்கு உள்ளான சில நபர்களும் தவெகவில் தங்களை இணைத்துக் கொண்டு வருகின்றனர். ஆளுங்கட்சி என்ற லேபிளைப் பயன்படுத்தி, தங்களின் பழைய குற்றச் செயல்களை மூடி மறைக்கவே அவர்கள் தவெகவை அடைக்கலமாகத் தேர்வு செய்கிறார்கள் என்ற பரவலான விமர்சனமும் எழுந்துள்ளது. மேலும் காவல்துறையினரால் தேடப்பட்டு வரும் சில முக்கியக் குற்றவாளிகள், தங்களைச் சட்ட நடவடிக்கைகளில் இருந்து பாதுகாத்துக் கொள்ள த.வெ.க.வின் முக்கிய அமைச்சர்கள் மற்றும் நிர்வாகிகள் முன்னிலையில் கட்சியில் இணைந்து வருவதாகவும் பரபரப்பு விவாதங்கள் எழுந்துள்ளன.

பெண்களுக்கு எதிராக வண்கொடுமை!

புதிய அரசு பொறுப்பேற்ற முதல் 15 நாட்களிலேயே 25க்கும் மேற்பட்ட கொலைகளும், 40க்கும் மேற்பட்ட கடுமையான குற்றச் சம்பவங்களும் பதிவாகி சலசலப்பை ஏற்படுத்தின. ஆர்.கே.நகர் பகுதியில் 10 வயது சிறுமிக்கு பாலியல் தொல்லை அளித்த புகாரில், தவெகவின் வார்டு செயலாளரான தினேஷ் என்பவர் போக்சோ சட்டத்தின் கீழ் கைதாகி சிறையில் அடைக்கப்பட்டார். பெண்களை பாதுகாப்பதே முதல் பணி என்று முழங்கிய முதல்வர் விஜய் இந்த சம்பவத்துக்கு எந்த எதிர்வினையும் ஆற்றவில்லை.

அடுத்து, தண்டையார்பேட்டையில் கிரிக்கெட் விளையாடும் போது ஏற்பட்ட தகராறில், தவெகவின் இரு பிரிவினரிடையே ஏற்பட்ட மோதலில் வாலிபர் ஒருவர் பலியானார். ஸ்ரீவைகுண்டத்தில், இளம்பெண் ஒருவருக்கு வேலை வாங்கித் தருவதாகக் கூறி காரில் அழைத்துச் சென்று, குளிர்பானத்தில் மயக்க மருந்து கலந்து கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய்த குற்றச்சாட்டில் தவெக இளைஞரணி அமைப்பாளர் பாலமுருகன் மற்றும் ராமநாதபுரத்தைச் சேர்ந்த த,வெ,க, நிர்வாகி ஜெயபால் ஆகிய இருவர் போக்சோ, பெண்களுக்கு எதிரான வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தத் சம்பவத்தில் குற்றவாளிகளுக்கு ஆதரவாகச் செயல்பட்டு, வழக்கை சமரசம் செய்ய முயன்றதாக தவெகவின் ஸ்ரீவைகுண்டம் எம்.எல்.ஏ சரவணன் மீது எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கடுமையானகுற்றச்சாட்டுகளைமுன்வைத்து, அவரைப் பதவியிலிருந்து நீக்கக் கோரியுள்ளார். புதுக்கோட்டையில் அதிக லாபம் தருவதாகக் கூறி 100க்கும் மேற்பட்டோரிடம் ரூ.25 கோடிக்கும் மேல் பண மோசடி செய்த புகாரில், தவெகவின் மத்திய மாவட்ட செயற்குழு உறுப்பினர் சரவணன் என்பவர் மாவட்ட குற்றப்பிரிவு போலீசாரால் கைது செய்யப்பட்டார்.

**காவலர்கள் மீது தாக்குதல்!**

அண்மையில் மதுபோதையில் காரை ஆபத்தான முறையில் ஓட்டி பொதுமக்களை அச்சுறுத்திய புகாரிலும் தவெக நிர்வாகி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். மதுரை சோழவந்தான் அருகே அரசு பேருந்துக்கு வழிவிடாமல் தகராறு செய்து, ஓட்டுநர் பிரசாந்த் என்பவரை பட்டாக்கத்தியால் தலையில் வெட்டிய வழக்கில் தவெக நிர்வாகி தனுஷ்கோடி போலீசார் தீவிரத் தேடுதல் வேட்டைக்குப் பின் கைது செய்யப்பட்டுள்ளார். கும்பகோணத்தில் அனுமதியின்றி பேனர் வைப்பதைத் தடுத்த காவலர்களைத் தாக்கி கையை உடைத்ததாக த.வெ.க. உள்ளூர் பிரமுகர்கள் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

**சேலத்தில் 50 பெண்களுக்கு பாலியல் தொல்லை!**

தஞ்சாவூர் திருவிடைமருதூரில் பெண் மற்றும் குழந்தையை அத்துமீறி வீட்டிற்குள் வைத்து பூட்டி அச்சுறுத்திய குற்றச்சாட்டில் தவெக நிர்வாகி சண்முகம் உட்பட 3 பேர் மீது போலீசார் வழக்குப் பதிவு செய்துள்ளனர். அனைத்து சம்பவங்களுக்கும் உச்சமாக தற்போது தமிழகத்தையே உலுக்கி வரும் ஆபாச வீடியோ சம்பவத்திலும் தவெக பிரமுகரே ஈடுபட்டிருப்பது தவெக அரசு மீது கடும் கொந்தளிப்பை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது.

சேலம் வீரபாண்டி பகுதியைச் சேர்ந்த தவெக பிரமுகர் மணிகண்டன் என்பவர், பெண்களின் ஆபாச வீடியோக்களை எடுத்து மிரட்டியதாக எழுந்த புகாரில் கைது செய்யப்பட்டுள்ளார். சேலம் மாநகரப் பகுதியில், சுமார் 50க்கும் மேற்பட்ட பெண்களை ஆபாசமாக வீடியோ எடுத்து, அதை வைத்தே மிரட்டி பாலியல் தொல்லை கொடுத்து வந்த தமிழக வெற்றிக் கழக பிரமுகர் மணிகண்டன் என்பவரை போலீசார் அதிரடியாகக் கைது செய்துள்ளனர். பொள்ளாச்சி சம்பவத்தைப் போல பெண்களை குறிவைத்து நடத்தப்பட்ட இந்த கொடூர சம்பவம் ஒட்டுமொத்த தமிழகத்தையும் உலுக்கியெடுத்துள்ளது.

**மக்கள் கடும் அச்சம்!**

இப்படி ஒவ்வொரு கொடூர சம்பவங்களும் தவெக பிரமுகர்கள் சம்பந்தப்பட்டு வருவது தமிழக மக்களை கடும் அச்சத்தில் ஆழ்த்தியுள்ளது. தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற காலம் எடுத்து கொள்ளலாம், ஆனால் ஆட்சி அதிகாரத்தை கையில் வைத்துக் கொண்டு சட்ட ஒழுங்கை சரி செய்யாமல் அலட்சியம் காட்டுவதோடு, முதல்வர் விஜய் மவுனம் சாதிப்பது மக்களை ஏமாற்றத்தில் ஆழ்த்தியுள்ளது. குற்றவாளிகளை தவெகவில் சேர்ப்பதை தடுத்தாலே பாதி குற்ற சம்பவங்கள் குறைந்த விடும் என்கின்றனர் சமூக ஆர்வலர்கள்.

நன்றி :
**'தினகரன்'**
நாள் : 14.06.2026

---

# முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி விமர்சனம்!

முதல் பக்கத் தொடர்ச்சி

மக்களும் குழந்தைகளும் துன்பத்தில் இருப்பதை ரசிக்க மின் துறை பணியாளர்கள் என்ன அவர்களின் தலைவர் போன்றவர்கள் என்று நினைக்கிறாரா அமைச்சர்? தன் கையாலாகத்தனத்தை வெளிச்சம் போட்டுக் காட்டகரன்ட் கட் காரணம் குறித்து இப்படியா கப்சா விடுவது?

த.வெ.க. ஆட்சியில் ஏற்பட்டுள்ள மாற்றம்"மின்வெட்டால் பள்ளிக்கு விடுமுறை விடும்"அவலம் தான்! தங்கள் பயிர்கள் தண்ணீர் இன்றி காய்வதால் விவசாயிகள் போராடும் துயரம்தான்! பத்திரிக்கையாளர்களை பார்த்தவுடன் பவர் கட்குறித்து அமைச்சர் சொல்லும் காரணங்கள் எல்லாமே இந்த தவெக அரசு சீரான மின்சாரத்தை அளிக்க முடியாமல் திணருகிறது என்பதுதான்!

**மின்வாரியத்தில் நிர்வாகத் தோல்வி!**

ஆனால் எதனால் மின்வெட்டு நடக்கிறது? என்பதுபற்றி அதிகாரிகளை வைத்து அமைச்சரோ, அமைச்சரை வைத்து முதலமைச்சரோ ஒரு ரிவ்யூ மீட்டிங்காவது நடத்தியிருக்கிறார்களா? இல்லை! எதுவுமே இல்லை! இதுவும் தவெக ஆட்சியில் நடத்துள்ள மாற்றம்தான்! ஒரே மாதத்தில் மின்வாரியத்தில் ஏற்பட்டுள்ள படு மோசமான நிர்வாக தோல்வி இந்த ஆட்சியின் மாற்றம்தான்!

தமிழ்நாட்டின் மின் தேவை ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்து வருகிறது என்பது எந்த அரசும் உணர வேண்டிய உண்மை. அதிகரித்து வரும் தேவைக்கு ஏற்ப திறமையாக நிர்வகித்து மக்களை இன்னலுக்கு உட்படாமல் காப்பதுதான் ஆட்சியின் நிர்வாகத் திறமை. அதைத்தான் எங்கள் கழகத் தலைவர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு செய்தது.

புள்ளிவிவரங்களுடன் சொல்ல வேண்டுமென்றால்,2021ல் அதிகபட்ச உச்சமாக 16,481 மெகாவாட் மின்சாரம் தேவைப்பட்டது. 2022ல் 17,196மெகாவாட், 2023ல் 18,053 மெகாவாட், 2024ல் 19,049, 2025ல் 20,148 மெகாவாட், 2026 ஏப்ரலில் 20,974 மெகாவாட் உச்சத்தைத் தொட்டிருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் மின் தேவை அதிகரித்தாலும், திராவிட மாடல் ஆட்சி இருந்தவரை சீரான மின்சாரத்தை பொதுமக்களுக்கு வழங்கியிருக்கிறோம்.

**ஒன்றிய அமைச்சரே திராவிட மாடல் ஆட்சியைப் பாராட்டினார்!**

சென்னையைப் பொருத்தவரை கடந்த ஆண்டு மின்தேவை 4,663 மெகாவாட் உச்சத்தைத் தொட்டது. 2024ல் 4,769 மெகாவாட் உச்சத்தைத் தொட்டது.அப்படி இருந்தாலும் மின்வெட்டு எங்குமே நடக்கவில்லை. பொதுமக்கள் நள்ளிரவில் கைக் குழந்தைகளுடன், வயதானவர்களுடன், நோயாளிகளுடன் தெருவுக்கு வந்து போராடும் நிலை ஏற்படவில்லை. அது மட்டுமா? இந்தியாவிலேயே மிக குறைவான மின்வெட்டு கொண்ட மாநிலம் தமிழ்நாடு. வளர்ந்த நாடுகளுக்கு இணையான சேவையை வழங்குகிறது என்று ஒன்றிய அமைச்சரே தமிழ்நாட்டைப் பாராட்டினார்.

கடந்த 5 ஆண்டுகால திராவிட மாடல் ஆட்சியில் 2 இலட்சம் விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்பு வழங்கி தடையில்லா மின்சாரம் கொடுத்தோம். நாங்கள் ஆட்சிப் பொறுப்பிற்கு வருவதற்கு முன்பு வருவாய்க்கும், செலவினத்திற்கும் இடையே இருந்த இடைவெளியை 5000 கோடி ரூபாயாகக் குறைத்தது திராவிட மாடல் ஆட்சி. எண்ணற்ற மின் உற்பத்திக்கான திட்டங்கள், துணை மின் நிலையம், மின்வழித்தடம், மின்மாற்றிகள் அமைத்தல் என பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டது. 90,000 மின்மாற்றிகள் புதியதாகவும், பழுதடைந்த மின்மாற்றி களை மாற்றியும் மின்வாரியத்தின் நிர்வாகம் சீரமைக்கப்பட்டது திராவிட மாடல் ஆட்சியில் தான்!

ஆகவே, நிர்வாகம் தெரியாமல் மற்றவர்கள் மீது பழி போடுவதற்கே "பத்திரிக்கையாளர் சந்திப்பை" பயன்படுத்துவதை மின்துறை அமைச்சர் கைவிட்டு, மின்வெட்டு பிரச்சனையை தீர்த்து பொதுமக்கள்இரவில் நிம்மதியாக உறங்க, பள்ளிக்கூடங்கள் மூடாமல் இருக்க, விவசாயிகள் வேதனைக் கண்ணீர் வடிக்காமல் இருக்க த.வெ.க அரசுஇனியாவது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**நிர்வாகத் திறமையற்ற மின்துறை அமைச்சர்!**

இன்ஸ்டா இன்ஃப்ளூயன்ஸர்களுக்கு கண்டண்ட் கொடுக்கும் வேலையை செய்யாமல், ரியலாக நிர்வாகம் செய்ய முயல வேண்டும். எங்கள் கழகத்தலைவர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் சொன்னதுபோல "பலரை சில காலம் ஏமாற்றலாம்; சிலரைப் பல காலம் ஏமாற்றலாம். ஆனால், எல்லோரையும் எல்லாக் காலமும் ஏமாற்ற முடியாது" என்பதை மின்வெட்டை தடுப்பது எப்படி எனத் தெரியாமல் தத்தளிக்கும் மின்துறை அமைச்சரும், இப்படியொரு திறமையற்ற அமைச்சரை நியமித்து மக்களை சொல்லொனாத் துயரத்திற்கு ஆளாக்கியிருக்கும் மாண்புமிகு முதலமைச்சரும் "ரீல்ஸை" மறந்து "ரியாலிட்டிக்கு" வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு முன்னாள் மின்துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி அவர்கள் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

---

# பெண்களை ஆபாச படம் எடுத்து மிரட்டுவதாக ஜிம் மாஸ்டர் மீது புகார்!

*சென்னை, ஜுன் 15 -*

*சென்னையில், சமூக வலைதளங்கள் மூலம் பெண்களிடம் பழகி, அவர்களை நிர்வாணமாக படம் எடுத்து மிரட்டல் விடுப்பதாக ஜிம் மாஸ்டர் மீது அவரது மனைவியே புகார் அளித்துள்ளார்.*

*கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த பிரேம் என்பவர், சென்னையில் ஜிம் வைத்து நடத்தி வந்தார். இந்நிலையில், ராயபுரத்தைச் சேர்ந்த பெண் ஒருவருடன் சமூக வலைதளம் மூலம் பழக்கம் ஏற்பட்டு, பின்னர், இருவரும் கடந்த 2018ம் ஆண்டு திருமணம் செய்துகொண்டனர்.*

*இந்த தம்பதிக்கு 2 பெண் குழந்தைகள் உள்ளனர். இந்நிலையில், சமூக வலைதளங்கள் மூலம் பல பெண்களிடம் பழகி வந்த பிரேம், அவர்களுக்கு போதை மருந்து கொடுத்து, நிர்வாணப் படங்கள் எடுத்து வைத்துக் கொண்டு அவர்களை மிரட்டி வந்ததாக கூறப்படுகிறது.*

*இதுகுறித்து,திருவொற்றியூரைச் சேர்ந்த பெண் ஒருவர் போலீசில் புகார் அளித்ததால், இந்த விவகாரம் ஜிம் பயிற்சியாளரின் மனைவிக்கு தெரியவந்துள்ளது. இதையடுத்து, அவர் கணவர் பிரேமை கண்டித்துள்ளார். ஆனால், பிரேம் தொடர்ந்து, பல பெண்களுடன் பழகி வந்ததாக கூறப்படுகிறது. இதனால் விரக்தியடைந்த பிரேமின் மனைவி, கணவரை பிரிந்து செல்ல முடிவெடுத்ததுடன், தமக்கும், பிள்ளைகளுக்கும் ஜீவனாம்சம் தர வேண்டும் என்று கோரியுள்ளார்.*

*ஆனால், பெண்களின் ஆபாச படங்களை அனுப்பி வைத்து, இதே போன்று, உன்னையும் படம் எடுத்து, இணையதளங்களில் வெளியிடுவேன் என மனைவியை மிரட்டியதாக கூறப்படுகிறது.*

*இதையடுத்து, ராயபுரம் காவல்நிலையத்தில் புகார் அளித்தும் நடவடிக்கை இல்லாத நிலையில், வண்ணாரப்பேட்டை துணை ஆணையர் அலுவலகத்தில் புகார் அளித்துள்ளார்.*